# அருள்மிகு அஷ்டலட்சுமி திருக்கோயில்
## (அருள்மிகு மகாலட்சுமி திருக்கோயில்)
## பெசன்ட் நகர், சென்னை– 90
போன் : 2446 6777,2491 7777

**2018 தமிழ்ப் புத்தாண்டு சித்திரைத் திங்கள் முதல் நாள் 14.04.2018**
**திருவிழா – செய்திக் குறிப்பு**

இத்திருக்கோயிலில் 2018ஆம் ஆண்டு, ஸ்ரீவிளம்பி வருட தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு காலை 6.30 மணி முதல் சன்னதிகள் பக்தர்கள் வசதிக்காக தரிசனத்திற்காக திறக்கப்படும்.

கட்டணமில்லா சேவையும், கட்டணச் சேவையும் எவ்வித பாகுபாடும் இல்லாமல் தரிசனம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆதிலட்சுமி முதல் அனைத்து லட்சுமி சந்நிதிகளிலும் அந்தந்தச் சந்நிதிகளுக்குரிய சிறப்போடு அலங்காரங்களும் செய்யப்பட உள்ளன. அஷ்டலட்சுமிகளையும் தரிசனம் செய்தபிறகே மற்ற சன்னதிகளை தரிசிக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. பெருமாள், மகாலட்சுமி, அஷ்டலட்சுமிகள் சன்னதி ஆகிய அனைத்து மூர்த்தங்களுக்கும் சிறப்பு அலங்காரம் ஏற்பாடு செய்யப்படுகிறது.

ஸ்ரீ நரசிம்மர் மற்றும் ஸ்ரீ சக்கரத்தாழ்வார்க்கு பழவகைகள் மற்றும் காய்கறிகளைக் கொண்டு சிறப்பு அலங்காரம்.

இலவசப் பிரசாதம் வழங்கவும், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பக்தர்கள் நலன் கருதி தட்டுப்பந்தல், கியூ வரிசை, பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியவை செய்யப்பட்டுள்ளன.

திருக்கோயில் முழுவதும் வண்ண விளக்குகளால் ஒளிரூட்டுதல், வாழை மரம், மாவிலைத் தோரணங்கள் மற்றும் விழாவினை முன்னிட்டு விளம்பர தட்டிகள் (பேனர்) வைத்து பொது மக்கள் நன்கு அறியும் வண்ணம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| காலை 8.00 | சிறப்பு திருமஞ்சனம் |
| காலை 10.00 | ஸ்ரீ விளம்பி வருட பஞ்சாங்கம் படித்தல், சிறப்பு வழிபாடு |
| நண்பகல் 12.00 | சிறப்பு அன்னதானம் |
| மாலை 4.00 | சிறப்பு அலங்கார வழிபாடு, பிரசாத விநியோகம் |
| மாலை 5.00 | ‘‘நிருத்தியமாமணி’’ திருமதி.பார்வதிமோகன்<br>R.S. பரத நாட்டியாலயா குழுவினர்<br>வழங்கும் பரதநாட்டியம் |
| மாலை 6.00 | ‘‘சிவானந்தா கலாலயம்’’ சென்னை – 42<br>வழங்கும் கர்நாடக சங்கீத இசை |
| இரவு 7.00 | Dr. லட்சுமி கணேஷ் M.F.A.,Ph.D., (Dance)<br>வேளச்சேரி அவர்களது குழுவினரின் பரத நாட்டிய நிகழ்ச்சி |
| | நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் :<br>கலைநன்மணிR. சுவாமிநாதன் M.B.A.,<br>சேராஸ் கலை நிறுவனம், சென்னை – 87. |
| இரவு 9.00 | சயனப் பூஜை |

பெருந்திரளான மக்கள் வரவை எதிர்பார்த்து வழக்கமான பூஜை நேரங்கள், சுத்தம் செய்யும் நேரங்கள் தவிர காலை 6.30 மணி முதல் பகல் 1.00 மணியிலும், மாலை 4.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை பக்தர்களின் வழிபாட்டிற்காக அனைத்துச் சன்னதிகளிலும் தரிசனம் செய்ய போதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. காவல் துறையினரும் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டு உள்ளன.

பக்தர்கள், "தாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக" என்பதற்கேற்ப, மற்றவர்கள் தரிசனம் செய்வதற்கு இடையூறு செய்யாவண்ணம் தரிசனம் செய்ய ஒத்துழைக்குமாறும், திருக்கோயில் நிர்வாகத்திற்குப் பூரண ஒத்துழைப்பு நல்கிடுமாறும் கனிவுடன் வேண்டுகிறோம்.

**எஸ். மதனகோபால், எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,**
**செயல் அலுவலர்**

**மு. ஜோதி லட்சுமி, எம்.ஏ., பி.எல்.,**
**தக்கார் / உதவி ஆணையர்**